ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2128/18 - 2019 ජූනි මස 19 වැනි බදාදා - 2019.06.19
*2128/18 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: AO/MN/02/07/2013.
காணி அமைச்சின் இல.: 4-3/4/2012/D/300.

பாதுகாப்புத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வட மாகாணத்தில், மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவில், இல. 57, பேசாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில், வட்டார இல. 04, பேசாலை எனப்படும் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2016.12.29 ஆந் திகதி வரையப்பட்ட வரைபட இல. MN 744 இல் தொகுதி 01, 02, 03, 04 எனக் காட்டப்பட்டுள்ளதும், மொத்தமாக 1.5064 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடைய வடலிக்கூடல் எனக் குறிப்பிடப்படும் காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

**வரைபட இல. MN 744**

*01.* ***துண்டு இல. 01, 02, 03, 04***

காணியின் பெயர் : வடலிக்கூடல்; விபரம் : பனந்தோட்டம் ; உரிமை கோருபவர் : செபமாலை தோமஸ் செல்வம் குருஸ் மற்றும் சவேரியன் பத்திநாதன் குலாஸ்; ஆரம்ப உரிமை கோருபவர் : செபமாலை தோமஸ் செல்வம் குருஸ் மற்றும் சவேரியன் பத்திநாதன் குலாஸ்; விஸ்தீரணம் : 1.5064 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மன்னார் நகர பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

க. சிவசம்பு,
பிரதேச செயலாளர்,
மன்னார் நகரம்.

பிரதேச செயலகம்,
மன்னார் நகரம்,
2019, யூன் 14.

7 - 57

1A - G 30311 - 47 (2019/06)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: டீஜவீஜபீ/எல்என்டீ/எல்ஏடீஏகியூ/சீஈபி/05/2015/10.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல.: 4-3/7/2016/எச்டபிள்யூ/420.

2019.03.15 ஆந் திகதிய 2114/68 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் III ஆம் பகுதியின் சிங்கள பிரதியில் இறுதி கிராம வரைபட இலக்கம் 1170 மற்றும் பிற்சேர்க்கை இல. 13, தாள் இல. 15 இல் துண்டுகளின் தொடர் 635 - 645 எனக் குறிப்பிடப்பட்ட துண்டுகளின் தொடர் 635 - 647 எனத் திருத்தப்பட்டுள்ளது.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 512, கிரிதிகல்ல கிராம அலுவலர் பிரிவில், கிரிதிகல்ல கிராமத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட நில அளவையாளரின் இறுதி கிராம வரைபட இல. 1170, பிற்சேர்க்கை இல. 13, தாள் இல. 15 மற்றும் 2018.09.07 ஆந் திகதியுடைய ஆரம்ப வரைபடத்தின் 2.2508 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய துண்டு இல. 635 தொடக்கம் 647 வரையான காணித் துண்டுகள் 13 இன் விபரங்கள் பின்வருமாறு.

எம். ஏ. எஸ். மாரசிங்க,
பிரதேச செயலாளர்,
இப்பாகமுவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
இப்பாகமுவ.

7 - 58

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: டீஜவீஜபீ/எல்என்டீ/எல்ஏடீஏகியூ/சீஈபி/05/2015/05-பகுதி III.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல.: 4-3/7/2016/எச்டபிள்யூ/259.

2018.08.14 ஆந் திகதிய 2084/14ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் III ஆம் பகுதியின் இறுதி கிராம வரைபட இலக்கம் 2806 மற்றும் பிற்சேர்க்கை இல. 6, தாள் இல. 9 இல் இல. 412 தியதுரே கிராம அலுவலர் பிரிவு எனக் குறிப்பிடப்பட்டது. இறுதி கிராம வரைபட இலக்கத்திற்கு பின் இல. 414 பன்லியத்த, இல. 413 நாபெட கிராம அலுவலர் பிரிவு என திருத்தப்பட்டுள்ளது.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில், குருநாகலை மாவட்டத்தில், இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், இஹல ஓதொட்ட கோரளை சிறு பிரிவில், இல. 414, பன்லியத்த, இல. 413 நாபெட கிராம அலுவலர் பிரிவில், ஹெவனதென்ன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் தயாரிக்கப்பட்ட இறுதி கிராம வரைபட இல. 2806 மற்றும் 2017.12.29 ஆந் திகதியில் பிற்சேர்க்கை இல. 6 தாள் இல. 9, துண்டு இல. 168 -293 (109 துண்டுகள்) வரையான 8.1166 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளின் விபரங்கள்.

எம். ஏ. எஸ். மாரசிங்க,
பிரதேச செயலாளர்,
இப்பாகமுவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
இப்பாகமுவ.

7 - 59

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.